

அலெக்சாந்தர் குப்ரீன்

பூனை யூஷ்கா





இதோ பார் நீகா, கேட்பதானுல் கவனமாய்க் கேள். இது நிபந்தனே. மேசை விரிப்பை நெருடுவதை விடு, அருமைப் பெண்ணே. குஞ்சத்தைப் பின்னல்களாகப் பின்னுதே...

அதன் பெயர் யூஷ்கா.

குதூகலம் பொங்கும் இரண்டு கண்களும் இள ரோஜா நிற மூக்குமாக, முதலில் அது தூவி உருண்டை போலத்தான் இருந்தது. இந்த உருண்டை சன்னல் குறட்டில் வெயிலில் உறங்கி வழிந்தது. தட்டில் விட்ட பாலேக் கண்களை இடுக்கிக் கொண்டும் முறுமுறுத்துக் கொண்டும் நக்கிக் குடித்தது. சன்னல் மேல் இருந்த ஈக்களைப் பாதத்தால் பிடித்தது. காகிதத்துடனும் நூல் கண்டுடனும் தன் வாலுடனும் விளையாடியபடித் தரையில் உருண் டது... வடிவமைந்த மேனியும் பெருமிதமும் உள்ள பெரிய பூனே, பூனேப் பிரியர்களின் பொறுமைக்கு இலக்கான முதல்தர அழகி, இந்தத் தூவி உருண்டையின் இடத்தில் எப்போது திடீரென்று உருவாயிற்று என்பது எங்களுக்கே நினைவு இல்லை.

சுருங்கச் சொன்னால், பூனைகளில் அழகு ராணியாக வளர்ந்தது அது. கரும் பழுப்புத் தோலில் நெருப்பு நிறப் புள்ளிகள். மார்பில் சட்டை முகப்பு மாதிரி அடர்ந்த வெள்ளை ரோமம். ஒவ்வொரு மீசையும் அரை அடி நீளம். உடம்பின் மேல் நீளமான ரோமம் ஒரேயடியாகப் பள பளத்தது. பின்னங் கால்கள் அகலமான சராய் மாட்டியவை போல இருந்தன. சிம்ணி துடைக்கும் புருஷ் போல் இருந்தது வால்!..


நீகா, நாய்க்குட்டியை மடியிலிருந்து இறக்கி விடு. அதன் காது என்ன, இசைப் பெட்டியின் சுழற்றும் பிடி என்று நினைக்கிறாயா? உன்னுடைய காதை யாராவது இந்த மாதிரித் திருகினால் எப்படி இருக்கும்? விடு, இல்லா விட்டால் கதை சொல்ல மாட்டேன்...


ஆயிற்றா. ஆனால் பூனை யூஷ்காவின் சுபாவந்தான் அதனிடம் இருந்த எல்லாவற்றையும் விடக் குறிப்பிடத் தக்கதாக இருந்தது. நீயே பார், நீகாக் கண்ணே. எத்தனையோ பிராணிகளின் கிட்டத்தில் நாம் வாழ்கிறோம், ஆனால் அவைகளைப் பற்றி நமக்கு ஒன்றுமே தெரியாது. நாம் தெரிந்து கொள்ள முயற்சியே செய்வது இல்லை. உனக்கும் எனக்கும் பழக்கமான எல்லா நாய்களையும் எடுத்துக் கொள்வோம். ஒவ்வொரு நாயின் பழக்க வழக்கங்களும் தனி, சுபாவம் தனி. பூனைகள் விஷயமும் அப்படியே. குதிரைகள் விஷயமும் சரி, பறவைகள் விஷயமும் சரி, அதே தான்.

நீகா, ஒரு நொடி கூட அடக்க ஒடுக்கமாக இருக்க முடியாத உன் மாதிரித் துருதுருப்பை வேறு யாராவது உண்டா எங்காவது? சுண்டு விரலால் இமையை எதற்காக அழுத்துகிறாய்? ஒன்றுக்குப் பதில் இரண்டு விளக்குகள் உனக்குத் தெரிகின்றன. அவை ஒன்று சேர்வதும் பிரிவதுமாக இருக்கின்றன, அப்படித்தானே? கண்களைக் கைகளால் தொடவே தொடாதே...

பிராணிகளைப் பற்றி மோசமாகப் பேசுபவர்களையும் நம்பவே நம்பாதே. கழுதை அசடு என்பார்கள் இவர்கள். ஒரு மனிதன் மூளை மழுங்கியவன், சண்டி, சோம்பேறி என்று குறிப்பிடுவதற்கு அவனைக் கழுதை என்பார்கள். கழுதை நேர் மாறானது என்பதை நினைவில் வைத்துக் கொள்வோம். அறிவுக் கூர்மை மட்டும் அல்ல, பணிவும் இனிய போக்கும் உழைப்பில் பற்றும் உள்ள பிராணி அது. ஆனால் அதன் சக்திக்கு மீறிய சுமையை அதன் மேல் ஏற்றினாலும் சரி, அதைப் பந்தயக் குதிரையாக எண்ணி ஓட ஓட விரட்டப் பார்த்தாலும் சரி, அது வெறுமே நின்று, ''இது என்னால் முடியாது. நீ என்ன வேண்டுமானாலும் செய்து கொள்'' என்று சொல்லி விடும். எவ்வளவு அடித்தாலும் சரி, அது இடத்தை விட்டு நகராது.

குதிரை முற்றிலும் வேறு மாதிரி. அது பொறுமை இல்லாதது, பதற்றம் உள்ளது, ரோசக்காரப் பிராணி. தன் சக்திக்கு மீறிய காரியத்தைக்






கூட அது செய்யும், கடு முயற்சியின் விளைவாக அப்போதே உயிரை விட்டு விடும்...

தாரா மாதிரி மட்டி என்றும் பேச்சு வழக்கில் சொல்லுவது உண்டு... ஆனால் இந்தப் பறவையை விட அறிவு உள்ளது உலகத்திலே கிடையாது. நடையைக் கொண்டு சொந்தக்காரர்களைத் தாரா அடையாளம் தெரிந்து கொள்ளும். உதாரணமாக, நடு ராத்திரியில் வீடு திரும்புகிறோம். தெரு வழியே நடந்து திட்டிவாசல் கதவைத் திறக்கிறோம், உள் முகப்பில் நடக்கிறோம். தாராக்கள் அங்கே இல்லை போலச் சத்தமே செய்யாமல் இருக்கின்றன. ஆனால் தெரியாத ஆள் உள்ளே நுழைந்ததுமே தாராக்கள் பரபரப்பு அடைந்து, ''குவா, குவா, குவா! குவா, குவா, குவா! யார் அது பிறத்தியார் வீடுகளில் வளைய வருகிறது?'' என்று கத்தத் தொடங்கி விடும்.

அவை எப்பேர்ப்பட்ட... நீகா, காகிதத்தைச் சவைக்காதே. துப்பி விடு. அவை எப்பேர்ப்பட்ட தாய் தகப்பன் என்று தெரிந்தால் மலைத்துப் போவாய்! ஆணும் பெண்ணும் முறை வைத்துக் கொண்டு முட்டைகளை அடைகாக்கும். ஆண் தாரா பெண் தாராவை விடப் பொறுப்போடு நடந்து கொள்ளும். தாய் ஒழிவு நேரத்தில் நீர்த் தொட்டியின் பக்கத்தில் அண்டை அயலாரோடு பெண்களின் வழக்கப்படி அளவுக்கு மேல் அரட்டை அடித்துக் கொண்டிருந்தால், தகப்பன் வெளியே வந்து அதன் பின் கழுத்தை



அலகால் பிடித்து மரியாதையாக வீட்டுக்கு இழுத்து வரும் — கூட்டில் தாயின் கடமைகளைச் செய்வதற்காக. அப்படியாக்கும்!

''தாராக் குடும்பம் உலாவப் புறப்படும் போது நிரம்ப வேடிக்கையாக இருக்கும். முன்னுல் தகப்பன்—குடும்பத் தலைவன், காவலன். பகட்டும் மிடுக்கும் ததும்ப அலகை உயரே தூக்கிக் கொண்டிருக்கும். பறவை வளர்ப்பிடம் முழுவதையும் அசட்டையாகப் பார்க்கும். ஆனுல் அனுபவம் இல்லாத நாயோ, உன் போல விளையாட்டுப் போக்கு உள்ள பெண்ணே அதற்கு வழி விட்டு விலகிக் கொள்ளா விட்டால் வந்தது விபத்து: பாம்பு படம் எடுப்பது போலத் தரைக்கு மேல் கழுத்தை நீட்டும், சோடாப்புட்டி போலச் சீறும், கடுமையான அலகுகளைத் திறக்கும். மறு நாள் பெண்ணின் காலில் முட்டுக்குக் கீழே பெரிய தழும்பு காணப்படும். நாயோ, பிய்ந்த காதும் தானுமாக உடம்போடு நடுங்கிக் கொண்டிருக்கும்.

ஆண் தாராவுக்குப் பின்னுல் வரும் தாராக் குஞ்சுகள், மஞ்சள்-பச்சைத் தூவி அடர்ந்தவை. ஒன்ருேடு ஒன்று ஒட்டிக் கொண்டு கீச்சிடும். அவைகளுடைய கழுத்துக்கள் தூவி இல்லாமல் மொட்டையாய் இருக்கும், கால்கள் உறுதி இல்லாதவை. இவை வளர்ந்து தகப்பன் போல் ஆகி விடும் என்பதை நம்பவே முடியாது. தாய் பின்னே வரும். ஆகா, அதை வருணித்து மாளாது. அது ஒரே இன்பமயமாக, வெற்றிப் பெருமிதத்துடன் நடை போடும்!


''என் கணவன் எவ்வளவு அற்புதமானவன், குழந்தைகள் எவ்வளவு அருமையானவர்கள் என்பதை உலகம் எல்லாம் பார்த்து ஆச்சரியப்படட்டும். நான் மனைவி, தாய், என்றாலும் உண்மையைச் சொல்லி விட வேண்டும்: இவர்களை விட மேலானவர்கள் உலகத்தில் தேடினாலும் கிடைக்க மாட்டார்கள்'' என்று சொல்வது போன்ற தோற்றத்துடன் பக்கத்துக்குப் பக்கம் சாய்ந்தாடியபடி நடக்கும்...

இன்னொரு விஷயத்தையும் கவனத்தில் வைத்துக் கொள், நீகா: வளைந்த குட்டைக் கால்களும் நீண்ட உடலும் உள்ள முதலைகள் வடிவான ஜெர்மன் நாய்களும் சரி, தாராக்களும் சரி, பார்ப்பதற்குப் பாங்கில்லாதவை மாதிரித் தோன்றினாலும் வீதியில் கார்களுக்கு அடியில் அகப்பட்டுக் கொள்வது அபூர்வம்.

அல்லது, குதிரையை எடுத்துக் கொள்வோம். அதைப் பற்றி ஆட்கள் என்ன சொல்லுகிறார்கள்? குதிரை அசடு. அழகும் வேகமாய் ஓடும் திறனும் இடங்களை நினைவு வைத்துக் கொள்ளும் தன்மையும் தாம் அதனிடம் இருக்கின்றன. மற்றப்படி அது வடி கட்டின மட்டி. போதாக்குறைக்குப் பார்வை மந்தமும் சபல புத்தியும் வீண் பதற்றமும் கொண்டது, மனிதனிடம் அது அன்பு பாராட்டுவது இல்லை. இப்படி எல்லாம் சொல்லுகிறார்கள். ஆனால் இந்த மாதிரி வெட்டிப் பேச்சு பேசுபவர்கள் இருள் அடைந்த லாயங்களில் குதிரைகளை வைத்திருப்பவர்கள், குட்டிப் பருவம் முதலே குதிரையை வளர்க்கும் மகிழ்ச்சியை அறியாதவர்கள். தன்னைக் குளிப்பாட்டித் தேய்த்துத் துடைத்து, லாடங்கள் அடிக்க இட்டுப் போய், தண்ணீர் காட்டி, தீனி போடுகிறவர்களிடம் குதிரை எவ்வளவு நன்றி பாராட்டுகிறது என்பதை ஒருபோதும் உணராதவர்கள் இவர்கள். இந்த மாதிரி ஆளின் மனத்தில் இருப்பது எல்லாம் குதிரை மேல் ஏறிக் கொள்வதும் அது தன்னை உதைக்காமலும் கடிக்காமலும் கீழே தள்ளி விடாமலும் இருக்க வேண்டுமே என்று பயப்படுவதுந்தான். குதிரையின் வாயைக் குளிர்ந்த நீரால் கழுவுவது, வழியில் அதிக மென்மையான பாதையைப் பயன்படுத்துவது, சரியான நேரத்தில் குதிரைக்கு அளவாகத் தண்ணீர் காட்டுவது, நிறுத்தத்தில் குதிரைத் துணியாலோ தன் மேல்கோட்டாலோ அதன் முதுகைப் போர்த்துவது என்பதெல்லாம் அவன் மூளையில் உதிப்பதே கிடையாது... குதிரை அவனிடம் எதற்காக மரியாதை காட்டப் போகிறது, உன்னைத்தான் கேட்கிறேன்?

குதிரை ஏற்றத்தில் இயல்பான ஆர்வம் உள்ளவன் எவனையும் கேட்டுப் பார். குதிரையை விட அறிவுக் கூர்மையும் நல்லதனமும் பெருந்தன்மையும் உள்ளது எதுவும் இல்லை என்றே எப்போதும் பதில் சொல்லுவான்—அதாவது நல்லவர்கள், புரிந்து கொள்பவர்கள் கைகளில் அது இருந்தால்.

''அராபியர்கள் குதிரையைக் குடும்பத்தவனாக மதிக்கிறார்கள். மிக



மிக நம்பகமான செவிலியிடம் விடுவது போலக் குழந்தைகளை அதன்பொறுப்பில் விடுகிறார்கள். கவலைப்படாதே கண்ணே, நீகா, அந்த மாதிரிக் குதிரை தேளைக் குளம்பால் மிதித்துத் துவைத்து விடும், காட்டு விலங்குகளை உதைத்து விரட்டி விடும். குழந்தை தவழ்ந்து பாம்புகள் இருக்கும் ஏதேனும் முட்புதரின் பக்கம் போனால், குதிரை அதன் சட்டைக் கழுத்துப் பட்டையையோ சராயையோ மெதுவாகப் பற்றித் தூக்கிக் கூடாரத்துக்கு இழுத்து வரும். ''போகக் கூடாத இடங்களுக்குப் போகாதே, அசடே'' என்பது போல.

சொந்தக்காரனைப் பிரிந்த ஏக்கத்தால் குதிரைகள் சில வேளைகளில் இறந்து போகின்றன. மெய்யாகக் கண்ணீர் விட்டு அழுகின்றன.

கொல்லப்பட்ட சொந்தக்காரனையும் அவனுடைய குதிரையையும் பற்றி சபரோழியே கசாக்கியர்கள் ஒரு பாட்டு பாடுவார்கள்: சொந்தக்காரன் போர்க்களத்தின் நடுவில் இறந்து கிடக்கிறான். அவனுக்கு

நாலு புறமும் நடந்த குதிரை
வாலினால் ஈக்களை ஓட்டிற்று,
விழிகளை அன்போடு நோக்கிற்று,
அழகு முகத்தில் நீர் தூற்றிற்று.

ஊம்? இப்போது சொல்லு, யார் சொல்லுவது சரி, எப்போதாவது குதிரை ஏறுபவன் சொல்லுவதா, அல்லது இயல்பான ஆர்வம் உள்ளவன் சொல்லுவதா?..

ஓ, அப்படியும் நீ பூனையின் கதையை மறக்கவில்லையா? நல்லது, இதோ அந்தக் கதைக்கு வருகிறேன்.

ஆனால் வருத்தமாய் இருக்கிறது. இன்னும் எத்தனையோ விஷயங்களை உனக்குச் சொல்ல எனக்கு ஆசை. பழிப்புக்கு உள்ளாகி இருக்கும் பன்றிகள் எவ்வளவு துப்புரவும் புத்திக் கூர்மையும் உள்ளவை, காக்கைகள் காவல் நாய்களை எப்படி ஐந்து வழிகளில் ஏமாற்றி அதனிடமிருந்து எலும்புத் துண்டைப் பறித்துக் கொள்கின்றன, எப்படி ஒட்டகங்கள்... நல்லது, ஒட்டகங்கள் எக்கேடும் கெடட்டும், பூனைக் கதையைத் தொடருவோம்.

வீட்டில் தனக்குப் பிடித்த இடத்தில், சோபாக்கள் மேலோ, தரை விரிப்புக்கள் மேலோ, நாற்காலிகள் மேலோ, பியானோவில் சுரக் குறிப்புப் புத்தகங்களுக்கு மேலோ படுத்துத் தூங்கிற்று யூஷ்கா. செய்தித்தாள்களின் மேல் பக்கத்துக்கு அடியில் ஊர்ந்து புகுந்து படுத்துக் கொள்வது அதற்கு நிரம்பப் பிடித்தது. அச்சகத்தின் மையில் பூனைகளின் மூக்குக்கு இனிமையான ஒரு மணம் இருக்கிறது. தவிரவும், காகிதம் குளிருக்கு அடக்கமாகக் கதகதப்பாகவும் இருக்கும்.

வீட்டில் உள்ளவர்கள் விழித்துக் கொள்ளத் தொடங்கியதும் யூஷ்கா முதன் முதலில் கன காரியமாக வருகை தருவது என் அறைக்குத் தான். அது



வும் என் பக்கத்து அறையில் கணீரென்ற குழந்தைக் குரல் ஒலிப்பது அதன் கூர்மையான காதுகளில் பட்ட பிறகே.

அழுந்தச் சாத்தப்படாத கதவை யூஷ்கா மூஞ்சியாலும் பாதங்களாலும் திறந்து உள்ளே வந்து கட்டில் மேல் தாவி என் கையிலோ கன்னத்திலோ ரோஜா நிற மூக்கால் குத்தி, 'முர்ர்ம்' என்று சுருக்கமாகச் சொல்லிற்று.

தன் வாழ்நாள் முழுவதிலும் அது ஒரு தரம் கூட மியாவ் என்று கத்தியது கிடையாது. காதுக்கு இனிமையான இந்த ''முர்ர்ம்'' என்ற ஒலியை மட்டுமே அது செய்தது.' ஆனால் அதில் பற்பல வகையான அர்த்தங்கள் தொனித்தன. ஒரு சமயம் கொஞ்சலையும் மறு சமயம் கலவரத்தையும் வேறு சமயம் கோரிக்கையையும் பின்னொரு சமயம் மறுப்பையும் மற்றொரு சமயம் நன்றியையும் இன்னொரு சமயம் எரிச்சலையும் பிறிதொரு சமயம் கண்டனத்தையும் அவை வெளியிட்டன. சுருக்கமான ''முர்ர்ம்'' ஒலியின் அர்த்தம் ''என் பின்னே வா'' என்பதுதான்.

அது தரையில் குதித்து, திரும்பிப் பார்க்காமல் கதவின் பக்கம் போயிற்று. நான் அதற்குப் பணிவேன் என்பதில் அதற்குச் சந்தேகமே ஏற்படவில்லை.

நான் கீழ்ப்படிந்தேன். மளமளவென்று உடை மாட்டிக் கொண்டு அரை இருட்டாய் இருந்த நடைக்கு வந்தேன். பச்சை மணி போலப் பசு மஞ்சள் நிற விழிகள் பளிச்சிட யூஷ்கா பக்கத்து அறைக் கதவின் பக்கத்தில் எனக்

காகக் காத்திருந்தது. என் நான்கு வயது மகன் தன் தாயுடன் அந்த அறையில் தூங்குவது வழக்கம். நான் கதவைக் கொஞ்சம் திறந்தேன். நன்றி தெரிவிக்கும் ''முர்ம்'' என்ற ஒலி லேசாகக் காதில் பட்டது. லாகவமான உடம்பை S போல வளைத்து, மயிர் அடர்ந்த வாலை நெளித்துக் குழந்தை அறைக்குள் ஓசை இல்லாமல் புகுந்தது யூஷ்கா.

அங்கே காலை வணக்கச் சடங்கு. முதலில் வணக்கம் தெரிவிக்கும் அதிகார பூர்வமான கடமை—தாயின் கட்டில் மேல் தாவல்: ''முர்ர்ம்! வணக்கம், எசமானி அம்மா!'' கையிலும் கன்னத்திலும் மூக்கால் கொஞ்சலான இடிப்பு, அவ்வளவுதான். பின்பு தரை மேல் தாவல், வலையைத் தாண்டிக் குழந்தைக் கட்டில் மேல் துள்ளல். இரண்டு தரப்பிலும் கனிவான சந்திப்பு.

''முர்ர்ம், முர்ர்ம்! வணக்கம் நண்பா! நன்றாகத் தூங்கினாயா?''

''யூ-ஷின்கா! யூஷின்கா! அருமைக் கண்ணே யூஷின்கா!''

அதை அடுத்துப் பக்கத்துக் கட்டிலிலிருந்து அதட்டல்:

''நிக்கலாய், பூனையை முத்தம் கொஞ்சாதே என்று நூறு தரம் படித்துப் படித்துச் சொல்லி இருக்கிறேனே! பூனை நோய்க் கிருமிகளின் வளர்ப்பிடம் ஆயிற்றே...''

யூஷ்கா ஒருவரையும் வழி அனுப்பியது கிடையாது. (செய்த நன்மைக்குச் சுருக்கமாகவும் உளமாரவும் நன்றி தெரிவித்தது.) ஆனால் இறைச்சிக் கடைப் பையன் வரும் நேரத்தையும் அவனுடைய காலடிச் சத்தத்தையும் அது நுட்பமாகத் தெரிந்து வைத்திருந்தது. அந்த வேளையில் அது வெளியில் இருந்தால் வாசல் படிக்கட்டில் இறைச்சிக்காகக் காத்திருந்தது. வீட்டுக்குள் இருந்தாலோ, இறைச்சியை எதிர் கொள்ளச் சமையல் அறைக்கு ஓடிற்று. சமையலறைக் கதவை என்னால் புரிந்து கொள்ள முடியாத சாமர்த்தியத்துடன் அது தானே திறந்தது. குழந்தை அறைக்







கதவில் போல உருண்டையான எலும்புப் பிடி வைத்தது அல்ல இந்தக் கதவு. நீளமான பித்தளைப் பிடி உள்ளது. யூஷ்கா ஓடுகிற ஓட்டத்தில் தாவிப் பாய்ந்து முன்னங் கால்களால் பிடியை இரண்டு பக்கங்களிலும் பிடித்துத் தொங்கியபடிப் பின்னங் கால்களைச் சுவர் மேல் ஊன்றிக் கொண்டது. விகுவுள்ள உடம்பு முழுவதாலும் இரண்டு மூன்று இடிகள்—கிளிக்!—பிடி நகர்ந்து கதவு திறந்தது. அப்புறம் வேலை சுளு தானே.

சில நாட்களில் இறைச்சிக் கடைப் பையன் அறுப்பதும் நிறுப்பதுமாக நிறைய நேரம் கடத்தினன். அப்போது யூஷ்கா நகங்களால் மேசை விளிம்பைப் பற்றிக் கொண்டு சர்க்கஸ்காரன் பார் ஆடுவது போல முன்னும் பின்னும் ஆடிற்று. ஆனல் மௌனமாக.

அந்தப் பையன் சிவப்பேறிய முகமும் குதூகல சுபாவமும் உள்ள வேடிக்கையான வெகுளி. எல்லாப் பிராணிகளிடமும் ஒரே அன்பு அவனுக்கு. யூஷ்கா மேலோ, உயிரையே வைத்திருந்தான். ஆனுல் தன்னைத் தொடுவதற்குக் கூட யூஷ்கா அவனை விடவில்லை. இறுமாப்போடு பார்த்துத் துள்ளி விலகி விட்டது. ஒரே கர்வம் பிடித்தது அது! அதன் மதிப்பில் பையன் நாள்தோறும் அதற்கு இறைச்சி கொண்டு வரும் யாரோ ஒருவன் மட்டுமே. அதன் வீட்டுக்கு வெளியே, அதன் அரவணைப்புக்கும் அருளுக்கும் வெளியே உள்ளவற்றை எல்லாம் அது அரசி போன்ற அசட்டையுடன் பார்த்தது. எங்களை அது அன்புகூர்ந்து ஏற்றுக் கொண்டது.

அதன் ஆணைகளை நிறைவேற்றுவது எனக்குப் பிடித்திருந்தது. உதாரணமாக, நான் வெப்பத் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தேன். முலாம்பழக் கொடியில் அதிகப்படித் தளிர்களை ஆழ்ந்த சிந்தனையுடன் கிள்ளிக் கொண்டிருந்தேன். இதற்கு நிரம்பக் கணக்கிடுவது தேவை. கோடை வெயிலாலும் தரையின் வெதுவெதுப்பாலும் வெக்கையாய் இருந்தது. அப்போது ஓசைப்படாமல் கிட்டே வந்தது யூஷ்கா.

''ம்ரும்!''

''வாரும், எனக்குத் தாகமாய் இருக்கிறது'' என்று இதற்கு அர்த்தம்.

சிரமத்துடன் உடம்பை நிமிர்த்தினேன். யூஷ்கா அதற்குள் முன்னே



இருந்தது. என் பக்கம் ஒரு தரங்கூடத் திரும்பவில்லை. மறுக்கவோ நேரம் கடத்தவோ எனக்குத் துணிவு வந்திருக்குமா? காய்கறித் தோட்டத்திலிருந்து முகப்புக்கும் பிறகு சமையல் அறைக்கும் பின்பு நடை வழியாக என் அறைக்கும் என்னை அது கூட்டிப் போயிற்று. எல்லாக் கதவுகளையும் அதற்கு முன்யோசனையோடு திறந்து, மரியாதையாக அதை முன்னே போக விட்டேன். என் அறை சேர்ந்ததும் தண்ணீர்க் குழாய் இருந்த கழுவு தொட்டி மேல் அது அனாயாசமாகத் தாவி, சலவைக் கல் விளிம்புகளில் மூன்று கால்களை ஊன்ற இடங்களைச் சாமர்த்தியமாகக் கண்டுபிடித்து, நாலாவது காலைச் சமநிலை குலையாதபடி தூக்கியபடிக் காது வழியாக என்னைப் பார்த்து,

''ம்ரும். தண்ணீரை வர விடும்'' என்றது.

குழாயைக் கொஞ்சம் திறந்து வெள்ளிக் கம்பி போன்ற நீர்த் தாரை பெருக வைத்தேன். குறுகிய ரோஜா நாக்கினால் நீரை அவசரமாக நக்கிக் குடித்தது.

பூனைகள் எப்போதாவது தான் தண்ணீர் குடிக்கும், ஆனால் வெகு நேரம், நிறையப் பருகும். வேடிக்கையான சோதனை செய்து பார்ப்பதற்காகக் குழாயின் நிக்கல் பிடியைச் சில வேளைகளில் லேசாகத் திருகினேன். தண்ணீர் சொட்டுச் சொட்டாக வந்தது.

யூஷ்காவுக்குப் பிடிக்கவில்லை. தன் அசௌகரியமான நிலையைப் பொறுமை இல்லாமல் மாற்றிக் கொண்டு தலையை என் பக்கம் திருப்பிற்று. புஷ்பராகக் கற்கள் போன்ற இரண்டு மஞ்சள் விழிகள் ஆழ்ந்த கண்டனம் தெரிவிக்கும் பாங்கில் என்னை நோக்கின.

''முர்ரும்! உம் அசட்டுத்தனத்தை விடும்!..''

குழாயை மூக்கால் பல தடவைகள் இடித்தது.

எனக்கு வெட்கமாய் இருந்தது. நான் மன்னிப்பு கேட்டேன். சரியானபடி நீர் பெருகச் செய்தேன்.

அல்லது இன்னொரு நிகழ்ச்சி.

மெத்தை தைத்த முக்காலிக்கு முன்னே தரையில் உட்கார்ந்திருந்தது யூஷ்கா. அதன் பக்கத்தில் கிடந்தது பத்திரிகைத் தாள். நான் உள்ளே வந்தேன். நின்றேன். யூஷ்கா கண்களைக் கொட்டாமல் என்னை ஒரே பார்வையாகப் பார்த்தது. நான் அதை நோக்கினேன். இப்படி ஒரு நிமிடம் போல் கழிந்தது. யூஷ்காவின் பார்வை இந்த மாதிரித் தெளிவாகச் சொல்லிற்று:

''எனக்கு என்ன வேண்டும் என்பது உமக்குத் தெரியும். ஆனாலும் பாசாங்கு செய்கிறீர். எப்படிப் போனாலும் நான் கேட்க மட்டும் மாட்டேன்.''

தாளை எடுக்க நான் குனிந்ததுமே மெத்தென்ற தாவல் ஒலியைக் கேட்டேன். பூனை மெத்தை இருக்கை மேல் இருந்தது. அதன் பார்வையில் மென்மை வந்து விட்டது. தாளைக் கூடார வடிவில் இரண்டாக மடித்து



அதனால் யூஷ்காவை மூடினேன். மயிர் அடர்ந்த வால் மட்டுமே வெளியே இருந்தது. ஆனால் அதுவும் கொஞ்சங் கொஞ்சமாகக் காகிதக் கூரைக்கு அடியில் இழுத்துக் கொள்ளப்பட்டது. காகிதம் இரண்டு மூன்று தடவைகள் சரசரத்தது, அசைந்தது, அவ்வளவுதான். யூஷ்கா தூங்கி விட்டது. நான் நுனி விரல்களில் நடந்து வெளியேறினேன்.

யூஷ்காவும் நானும் அமைதியான குடும்ப சுகம் அனுபவித்த தனிப்பட்ட நேரங்கள் இருந்தன. நடு இரவுக்குப் பின் நான் எழுதிய போது வந்தன இவை. இது களைப்பூட்டும் வேலை, ஆனால் ஈடுபட்டு விட்டால், அமைதியான இன்பம் இதில் நிறைய உண்டு.

பேனாவால் மளமளவென்று கிறுக்கிக் கொண்டு போகும் போது மிகவும் தேவையான ஒரு சொல் வரவில்லை. எழுதுவதை நிறுத்தினேன். எப்பேர்ப்பட்ட நிசப்தம்! விளக்கில் மண்ணெண்ணெய் செவியில் பட்டும் படாமலும் சீறிற்று. காதில் அலையோசை கேட்டுக் கொண்டிருந்தது. இதனால் இரவின் நிசப்தம் இன்னும் அதிகம் ஆயிற்று. எல்லா மனிதர்களும் தூங்கிக் கொண்டிருந்தார்கள், எல்லாப் பிராணிகளும் பறவைகளும் குழந்தைகளும் பக்கத்து அறையில் நிக்கலாயின் விளையாட்டுச் சாமான்களும் தூங்கிக் கொண்டிருந்தன. நாய்கள் கூடக் குலைக்கவில்லை. உறங்கி விட்டன. என் கண்கள் மயங்கின, எண்ணங்கள் சிதறி மறைந்தன. நான் எங்கே இருக்கிறேன்? அடர்ந்த காட்டிலா, அல்லது உயரமான கோபுரத்தின் உச்சியிலா? தெரியவில்லை. மென்மையும் விகுவும் உள்ள ஒன்று இடிக்கவே, திடுக்கிட்டேன்.

யூஷ்கா தரையிலிருந்து மேசை மேல் அனுயாசமாகத் தாவிற்று. அறைக்குள் எப்போது வந்ததோ, தெரியாது.

மேசை மேல் கொஞ்சம் திரும்பி, இடத்தை நோட்டமிட்டபடி உடம்பை நெளித்து, தோள் பட்டைகளைக் கூனிக் கொண்டு, தூவி அடர்ந்த உருண்டையாகச் சுருண்டு என் வலது கையின் பக்கத்தில் உட்கார்ந்தது. நான்கு பாதங்களும் மடக்கி மறைக்கப்பட்டிருந்தன. முன் பாதங்களின் வெல்வெட்டு உறைகள் தாம் கொஞ்சம் போல வெளியே நீட்டிக் கொண்டிருந்தன.

நான் மறுபடியும் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் விரைவாக எழுதலானேன். சில வேளைகளில் தலையை அசைக்காமல் பூனை மேல் பார்வை செலுத்தினேன். அது என் பக்கத்தில் முக்காலாக முடங்கி உட்கார்ந்திருந்தது. அதன் பிரமாண்டமான மரகதப் பச்சைக் கண் நெருப்பின் மேல் அசையாமல் நிலைத்திருந்தது. கண்ணின் குறுக்கே மேலிருந்து கீழே சென்றிருந்தது மழிகத்தி முனை போலக் குறுகிய கருமணிக் கீற்று. ஆனால் என் இமைகள் துளி அசைந்தாலும் போதும், யூஷ்கா அதைக் கண்டு கொண்டு அழகு சொட்டும் முகத்தை என் பக்கம் திருப்பிற்று. கீற்றுகள் பளிச்சிடும் கரிய வட்டங்களாகச் சட்டென்று மாறின. அவற்றைச் சுற்றி மெல்லிய மஞ்சள் விளிம்புகள் தென்பட்டன. நல்லது, யூஷ்கா, மேலே எழுதுவோம்.

பேனு சரசரவென்று கிறுக்கிக் கொண்டு போயிற்று. பொருத்தமான, கச்சிதமான சொற்கள் தாமாகவே வந்தன. வாக்கியங்கள் என் விருப்பப்படிப் பல வகைகளில் செப்பமாக அமைந்தன. ஆனால் அதற்குள் தலை கனத்தது, முதுகில் வலி எடுத்தது, வலது கை விரல்கள் நடுங்கத் தொடங்கின. முடிக்க நேரம் வந்து விட்டதோ?

வந்து விட்டது என்று எண்ணிற்று யூஷ்கா. வெகு நேரத்துக்கு முன்பே அது தனக்கு ஒரு விளையாட்டைக் கற்பனை செய்து கொண்டிருந்தது. என் காகிதத்தில் உருவாகும் வரிகளைக் கவனமாகப் பார்த்து, பேனவை விழிகளால் தொடர்ந்து, விகாரமான சிறு கறுப்பு ஈக்களை நான் பேனவிலிருந்து வெளியே விடுவதாக எண்ணிக் கொண்டது. திடீரென்று கடைசி ஈயை முன் பாதத்தால் டப்பென்று அடித்தது. அடி குறி தவறாமல் சட்டென்று பட்டது. கறுப்பு இரத்தக் கறை காகிதத்தின் மேல் பரவிற்று. ''தூங்கப் போவோம் வா, யூஷ்கா. ஈக்களும் தூங்கட்டும் நாளை வரை.''

வெளியே, என் அருமை அசோக மரத்தின் மங்கலான உருவரைகளைக் காண முடிந்தது. என் கால்களில் போர்வைக்கு மேலே புரண்டது யூஷ்கா.

யூஷ்காவின் நண்பனும் அதை வதைப்பவனுமான நிக்கலாய் உடம்பு சரி இல்லாமல் கிடந்தான்.

பூனையை நாங்கள் நோயாளியின் அறைக்குள் விடவில்லை. அது சரியும் தான். பூனை எதையாவது இடிக்கும், தரையில் தள்ளும், பையனை எழுப்

பும், பயமுறுத்தும். குழந்தை அறைக்கு வராமல் இருப்பதற்கு அதைப் பழக்க வெகு நேரம் பிடிக்கவில்லை. தனது நிலைமையை அது விரைவில் புரிந்து கொண்டது. ஆனல் வெளியே கதவின் கிட்டத்தில் நாய் போல வெறும் தரையில் படுத்து, கதவிற்கு அடியில் இருந்த இடுக்கில் ரோஜா நிற மூக்கை நுழைத்துக் கொண்டு கிடந்தது. இரை தின்னவும் கொஞ்ச நேரம் உலாவவும் மட்டும் அப்பால் போயிற்று. குழந்தையின் உடம்பு மோசமாய் இருந்த நாட்களில் மற்ற நேரம் எல்லாம் அவனுடைய அறை வாசலிலேயே படுத்திருந்தது. அதை விரட்டவே முடியவில்லை. தவிர வருத்த மாகவும் இருந்தது. குழந்தை அறைக்குள் போகையிலும் அங்கிருந்து வரு கையிலும் ஆட்கள் அதைத் தாண்டினர்கள், கால்களால் இடித்தார்கள், அதன் வாலையும் பாதங்களையும் மிதித்தார்கள், அவசரமும் பொறுமை இல்லாமையும் காரணமாகச் சில வேளைகளில் உதைத்தும் தள்ளினர்கள். அது வெறுமே கீச்சிட்டது, வழி விட்டது, மறுபடி மெதுவாக, ஆனல் விடாப்பிடியாக முந்திய இடத்துக்குத் திரும்பிற்று. பூனை இந்த மாதிரி நடந்து கொண்டதை அதற்கு முன் நான் கேட்டதும் இல்லை, படித்ததும் இல்லை. மருத்துவர்கள் எதற்கும் ஆச்சரியப்படாதிருக்கப் பழகினவர்கள், ஆனல் டாக்டர் ஷெவ்சேன்கோ பெரிய மனிதப் பாங்குடன் புன்னகை செய்து சொன்னர்:



''வேடிக்கையானது உங்கள் பூனே. பாராக் கொடுக்கிறதே! இது விசித்திரம்...''

ஐயோ, நீகா, எனக்கு இது கொஞ்சங்கூட வேடிக்கையாகவும் இல்லே, விசித்திரமாகவும் இல்லே. யூஷ்காவின் பரிவுக்காக மென்மையான நன்றி உணர்வு என் நெஞ்சில் இன்றுவரை நிலேத்திருக்கிறது...

இதைக் காட்டிலும் விந்தையானது என்ன தெரியுமா? நிக்கலாயின் நோயில் கடைசிக் கடும் நெருக்கடிக்குப் பிறகு உடம்பு சரியாகத் தொடங்கினதும், எல்லாம் சாப்பிடவும் கட்டிலில் விளேயாடவும் கூட அவன் அனுமதிக்கப்பட்டதும், யூஷ்கா தன் பாராவை நிறுத்தி விட்டது. என் கட்டிலில் வெட்கம் இல்லாமல் வெகு நேரம் படுத்து உறங்கிற்று. ஆனுல் நிக்கலாயின் அறைக்கு முதல் தரம் போன போது எந்த விதமான கிளர்ச்சியையும் அது காட்டவில்லே. அவன் அதைக் கசக்கித் துவைத்தான், எத்தனேயோ விதமான செல்லப் பெயர்களே அதன் மேல் பொழிந்தான். ஆனந்த மிகுதியால் யூஷ்கெவிச் என்று கூட அதை அழைத்தான்! அதுவோ, அவனுடைய இன்னும் வலுவடையாத கைகளிலிருந்து சாமர்த்தியமாக நழுவி, ''ம்ர்ம்'' என்று சொல்லி விட்டுத் தரையில் குதித்து வெளியே போய் விட்டது.

அருமை நீகா, இப்போது நான் சொல்லப் போகிற சேதிகளே ஒரு வேளே நீ கூட நம்ப மாட்டாய். இதை நான் யார் யாரிடம் சொன்னேனே அவர்கள் எல்லோருமே நான் சொன்னதை ஒரு வகையான புன்னகையுடன் கேட்டார்கள். கொஞ்சம் அவநம்பிக்கை, கொஞ்சம் தந்திரம், கொஞ்சம் வலிந்து வருவித்துக் கொண்ட மரியாதை அந்தப் புன்னகையில் இருந்தன. நண்பர்களோ, சில வேளேகளில் வெளிப்படையாகவே சொன்னுர்கள்: ''எழுத்தாளர்களான உங்களுடைய கற்பனேயே தனி தான்! உண்மையில் எங்களுக்குப் பொருமை உண்டாகிறது. பூனே டெலிபோனில் பேச... ஏற்பாடு செய்தது என்பதை யாராவது கண்டதுண்டா, கேட்டதுண்டா எங்கேனும்?''

மெய்யாகவே ஏற்பாடு செய்தது. இது எப்படி நடந்தது என்பதைக் கேள், நீகா.

உடம்பு குணமான பிறகு நிக்கலாய் மெலிந்து, வெளிறி, பசுமை படிந்து இருந்தான். உதடுகள் வெளுத்திருந்தன, கண்கள் குழிந்து விட்டன, கைகள் பெயருக்கு இள ரோஜா நிறமாக ஒளி ஊடுருவக் கூடியவையாக இருந்தன. ஆனுலும் மனிதனுடைய நல்லதனம் குறையாத பெரிய சக்தி. உடம்பைத் தேற்றிக் கொள்வதற்காக இருநூறு கிலோமீட்டர் தொலேவில் இருந்த அருமையான உடல்நல விடுதிக்கு நிக்கலாயை அவன் தாயுடன் அனுப்ப முடிந்தது. இந்த உடல்நல விடுதியிலிருந்து தொலேபேசியில் நேரே பெத்ரோகிராதுடன் தொடர்பு கொள்ள வசதி இருந்தது. கொஞ்சம் வற்புறுத்திஞல் எங்கள் கோடைகால இருப்பிடத்துடனும் தொடர்பு கொள்ள முடிந்





தது, அங்கே எங்கள் வீட்டில் தொலைபேசி இருந்தது. நிக்கலாயின் தாய் இந்த எல்லா விவரங்களையும் வெகு விரைவில் தெரிந்து கொண்டாள். ஒரு நாள் தொலைபேசிக் குழாயில் இனிய குரல்களைக் கேட்டு நான் மிகுந்த மகிழ்ச்சியும் அளவு கடந்த வியப்பும்கூட அடைந்தேன். கொஞ்சம் களைத்த, காரியப் பாங்குள்ள பெண் குரல் முதலில் கேட்டது. பிறகு உற்சாகமும் குதூகலமும் பொங்க ஒலித்தது குழந்தைக் குரல்.

தன் பெரிய, சிறிய நண்பர்கள் இரண்டு பெயரும் புறப்பட்டுப் போன பிறகு வெகு நாட்கள் வரை யூஷ்கா கலவரமும் விளங்காமையும் கொண்டு குழம்பிக் கொண்டிருந்தது. ஒவ்வோர் அறையிலும் சுற்றி வந்து மூலைகளை மூக்கால் இடித்த வண்ணமாய் இருந்தது. இடித்த பின் ''மீக்!'' என்று ஆழ்ந்த அர்த்தம் தொனிக்கக் கூறிற்று. எங்கள் நீண்ட நாள் பழக்கத்தில் இந்தச் சொல்லை நான் முதல் தடவையாகக் கேட்டேன். பூனை மொழியில் அதற்கு என்ன அர்த்தமோ, என்னால் சொல்ல முடியாது, ஆனால் மனித மொழியில் பின் வரும் அர்த்தம் அதில் தெளிவாகத் தொனித்தது: 'என்ன நடந்தது? எங்கே அவர்கள்? எங்கே மறைந்து விட்டார்கள்?'

பசுமஞ்சள் விழிகளை அகலத் திறந்து என்னை ஒரே பார்வையாகப் பார்த்தது. வியப்பும் கட்டாயமாகப் பதிலைக் கோரும் கேள்வியும் அதில் எனக்குத் தென்பட்டன.



என் எழுது மேசைக்கும் மெத்தை இருக்கைக்கும் நடுவே, அடைசலான இடுக்கில் தரையில் மறுபடி படுத்துக் கொள்ளத் தொடங்கிற்று அது. மென்மையான சாய்வு நாற்காலிக்கும் சோபாவுக்கும் வரும்படி நான் அதை வீணே அழைத்தேன். அது மறுத்து விட்டது. நான் அதைத் தூக்கி அங்கே கொண்டு விட்ட போது, நிமிட நேரம் உட்கார்ந்து இருந்த பின் அது மரியாதையாகக் குதித்து, இருட்டும் சுரசுரப்பும் குளிரும் உள்ள தன் மூலைக்குத் திரும்பி விட்டது.

எங்கள் தொலைபேசிக் கருவி சாண் அகல முன்னறையில் வட்ட மேசை மேல் இருந்தது. அதன் பக்கத்தில் இருந்தது முதுகு இல்லாத வைக்கோல் நாற்காலி. உடல்நல விடுதியுடன் எனது எந்தப் பேச்சின் போது யூஷ்கா என் காலருகே நிற்கக் கண்டேன் என்பது எனக்கு நினைவு இல்லை. தொடக்கத்திலேயே இது நிகழ்ந்தது என்பதுதான் எனக்குத் தெரியும். ஆனால் விரைவில் தொலைபேசி மணி அடித்த போதெல்லாம் யூஷ்கா ஓடிவரத் தலைப்பட்டது. முடிவில் முன்னறையிலேயே குடி புகுந்து விட்டது.

மிகவும் காலம் தாழ்த்தே நான் யூஷ்காவைப் புரிந்து கொண்டேன். ஒரு தரம் நிக்கலாயுடன் நான் கொஞ்சிப் பேசிக் கொண்டிருந்த போது அது தரையிலிருந்து ஓசை செய்யாமல் என் தோள் மேல் தாவி, நிலையைச் சமப்படுத்திக் கொண்டு, குத்திட்ட காதுகளுடன் தன் மயிரடர்ந்த முகத்

தை என் கன்னத்தின் பின்னிருந்து நீட்டிய போதுதான் அது விரும்பியதை நான் புரிந்து கொண்டேன்.

நான் இப்படி எண்ணமிட்டேன்: ''பூனைகளின் காதுகள் கூர்மையானவை, நாய்களுடையவற்றை விட மேலானவை, மனிதனுடைய காதுகளைக் காட்டிலுமோ, எவ்வளவோ நுட்பமானவை.'' நண்பர்கள் வீடுகளுக்குப் போய் விட்டு இரவில் நாங்கள் திரும்பிய போது யூஷ்கா எங்கள் காலடிச் சத்தத்தைத் தொலைவிலேயே அடையாளம் தெரிந்து கொண்டு ஓடி வந்து மூன்றாவது குறுக்குத் தெருவில் எங்களை எதிர் கொண்டது. ஆகவே, தன்னவர்களை அது நன்றாக அறிந்திருந்தது.

இன்னும் ஓர் உதாரணம். எங்களுக்குத் தெரிந்த பையன் ஒருவன் இருந்தான். ஜார்ஜிக் என்று பெயர். நான்கு வயது. ஒரே துருதுருப்பை. முதல் தரம் எங்கள் வீட்டுக்கு வந்த போது அவன் பூனையைக் கடுமையாகத் தொல்லைப்படுத்தினான்: அதன் காதுகளையும் வாலையும் பிய்த்தான், கண்டபடி நசுக்கித் துவைத்தான், அதை வயிற்றின் குறுக்கே அழுத்திக் கொண்டு அறைகளில் சுற்றி வந்தான். தனக்கு இயல்பான நயப்பாங்கின் காரணமாக யூஷ்கா நகங்களை ஒரு தரங்கூட நீட்டவில்லை, ஆனாலும் அந்தப் பையன் செய்ததை அதனால் பொறுக்க முடியவில்லை. அதன் பிறகு ஜார்ஜிக் வந்த போதெல்லாம்—அது இரண்டு வாரங்கள் கழித்தோ, ஒரு மாதத்திற்கு அல்லது இன்னும் அதிகக் காலத்திற்குப் பிறகோ, எப்பொழுது ஆனாலும்—ஜார்ஜிக்கின் கணீர்க் குரல் வாசல் பக்கம் கேட்க வேண்டியது தான் தாமதம், முறையிடும் கத்தலுடன் அது விர்ட்டென்று பாய்ந்து ஓடித் தப்பி விட்டது. கோடையில் முதலாவது திறந்த சன்னல் வழியாக வெளியேறிற்று, பனிக்காலத்தில் சோபாவுக்கோ அலமாரிக்கோ அடியில் புகுந்து கொண்டது. அதற்கு நல்ல நினைவாற்றல் இருந்தது என்பதில் சந்தேகம் இல்லை.

''அப்படி இருக்கும் போது நிக்கலாயின் இனிய குரலைத் தெரிந்து கொண்டு, தன் அருமை நண்பன் எங்கே ஒளிந்திருக்கிறான் என்று பார்ப்பதற்காக அது மூஞ்சியை நீட்டியதில் விந்தை என்ன?'' என்று நினைத்தேன்.

என் ஊகம் சரிதானா என்று பார்க்க எனக்கு நிரம்ப விருப்பம் உண்டாயிற்று. அன்று மாலையே உடல்நல விடுதிக்குக் கடிதம் எழுதினேன். பூனையின் நடத்தையை விவரமாக வருணித்து, அடுத்த தடவை என்னோடு போனில் பேசும் போது, யூஷ்காவிடம் வீட்டில் பேசிய கொஞ்சல் வார்த்தைகளைக் கட்டாயம் நினைவுபடுத்திக் கொண்டு சொல்லும்படி நிக்கலாயை வெகுவாகக் கேட்டுக் கொண்டேன். அப்போது தொலைபேசிக் குழாயை நான் பூனையின் காதருகே கொண்டு போவேன் என்று எழுதினேன்.

விரைவில் எனக்குப் பதில் கடிதம் கிடைத்தது. பூனையின் நினைவால் நிக்கலாயின் நெஞ்சு உருகி விட்டது. அதற்கு அவன் வணக்கம் தெரிவிக்



கிறுன். இரண்டு நாட்களுக்குப் பிறகு உடல்நல விடுதியிலிருந்து என்னேடு பேசுவான். அதற்கு மறு நாள் மூட்டை முடிச்சுக்களோடு தாயும் மகனும் வீடு திரும்பி விடுவார்கள் என்று சொல்லிற்று கடிதம்.

மெய்யாகவே மறு நாள் காலையில், உடல்நல விடுதியிலிருந்து ஆட்கள் என்னேடு பேசுவார்கள் என்று டெலிபோன் நிலையத்தார் தெரிவித்தார்கள். யூஷ்கா பக்கத்தில் தரையில் நின்று கொண்டிருந்தது. நான் அதை எடுத்து மடியில் வைத்துக் கொண்டேன். நிக்கலாயின் குதூகலம் பொங்கும் உற்சாகக் குரல் கணீரென்று ஒலிக்கத் தொடங்கிற்று. எத்தனை எத்தனை புதிய அனுபவங்களும் அறிமுகங்களும்! வீட்டைப் பற்றி எத்தனை கேள்விகளும் வேண்டுகோள்களும் கட்டளைகளும்! என் வேண்டுகோளைத் தெரிவிக்க எனக்குச் சிரமத்துடன் தான் நேரம் கிடைத்தது.

''அருமை நிக்கலாய், தொலைபேசிக் குழாயை இதோ, யூஷ்காவின் காதுக்குக் கிட்டே வைத்துக் கொள்கிறேன். வைத்தாயிற்று! உன்னுடைய அன்புச் சொற்களை அதனிடம் பேசு.''

''எந்தச் சொற்களை? எனக்குத் தெரியாது எந்தச் சொற்களும்'' என்று வறட்டுத்தனமாகப் பதில் அளித்தது குரல்.

''நிக்கலாய், கண்ணே, யூஷ்கா உன் குரலைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. அதனிடம் கொஞ்சலாக ஏதாவது பேசு. சீக்கிரம்.''

''அட எனக்குத் தெ-ரி-யாது. எனக்கு நினை-வில்லை! நீ எனக்குப் பறவை வீடு வாங்கித் தருவாய் அல்லவா? இங்கே சன்னலுக்கு வெளியே தொங்கு கிறதே, அது மாதிரி?''

''ஊம், நிக்கலாய்க் கண்ணே, என் தங்கமே, என் அருமைப் பையா, யூஷ்காவோடு பேசுவதாக வாக்களித்திருக்கிறுயே நீதான்.''

''அட எனக்குப் பூனைப் பேச்சு பேச வராது. என்னுல் முடியாது. எனக்கு மறந்-ந்து போச்சு.''

தொலைபேசிக் குழாய் திடீரென்று கிளிக்கிட்டது, கரகரத்தது. தொலை பேசி நிலையப் பெண்ணின் கடுமையான குரல் ஒலித்தது:

''அசட்டுப் பேச்சு கூடாது. குழாயை வைத்து விடுங்கள். மற்ற வாடிக் கைக்காரர்கள் காத்திருக்கிறுர்கள்.''

மெல்லிய தட்டொலி. தொலைபேசியின் சீறல் அடங்கி விட்டது.

யூஷ்காவும் நானும் செய்த சோதனை பலிக்காமலே போய்விட்டது. இது வருந்தத் தக்கது. தனக்குப் பழக்கமான கொஞ்சல் வார்த்தைகளுக்கு மறு மொழியாக எங்கள் சமர்த்துப் பூனை ''முர்ர்ம்'' என்ற தன் அன்புச் சொல்லை ஒலிக்குமா என்று தெரிந்து கொள்ள எனக்கு மிகவும் ஆவலாக இருந்தது.

யூஷ்காவின் கதை இவ்வளவுதான்.

வயதாகி விட்டதால் கொஞ்ச காலத்துக்கு முன் அது இறந்து போயிற்று. இப்போது எங்கள் வீட்டில் இருக்கிறது பட்டு மயிர், வெல் வெட்டு வயிற்றுக் கடுவன் பூனை. அதைப் பற்றி, என் அருமை நீகா, இன் னெரு தடவை சொல்லுகிறேன்.''



மொழிபெயர்ப்பாளர்: பூ. சோமசுந்தரம்
ஓவியர்: த. பரோவ்ஸ்கி

А. КУПРИН

ЮШКА

на тамильском языке

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

К $\frac{70802-757}{014(01)-81}$ 0/o.

4803010101